**பேராசிரியர் இரா.தியாகசுவாமி**
**வாழ்நாள் சாதனை பாராட்டுக்குழு**
முள்ளஞ்சேரி
முளங்குழி அஞ்சல்
குமரிமாவட்டம் – 629 162
www.Kaponline.net
Mullanchery @ gmail.com

பெறுநர்

தலைமையாசிரியர்/முதல்வர்

ஐயா,

வணக்கம். மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரியில் பணியாற்றி ஓய்வு பெற்ற பேராசிரியர் இரா.தியாகசுவாமி அவர்கள் குமரிமாவட்ட பள்ளிகளில், கல்லூரிகளில், இளைஞர் மன்றங்களில், விழாக்களில் கலந்து கொண்டு கடந்த 55 ஆண்டுகளாக மேடைகளில் தமிழ் முழக்கம் செய்தவர். திராவிடக் கொள்கைளில் ஈர்க்கப்பட்டவர் பெரியார்,பேரறிஞர்அண்ணா, கலைஞர் மீது பற்று கொண்டு மேடைகளில் முழங்கியவர்.

ஓய்வு பெற்ற பின்பும் கிராமப்புற மாணவர்களின் அறிவுத்திறமைகளை மேம்படுத்துவதற்காக சமூக ஆர்வலர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து அறிவியல் கருத்தரங்குகள், தன்னார்வப் பணிகள்பல செய்து வந்தவர். தற்போது உடல் தளர்வுற்ற நிலையில் இருக்கும் பேராசிரியருக்கு பாரட்டுவிழா நடத்தி வாழ்நாள் சாதனையை சிறப்பிக்க இருக்கிறோம்.

வாழ்நாள் சாதனையைப் பாராட்டும் வண்ணம் ஜூன்19ஆம் தேதி சனிக்கிழமை பள்ளி மாணவமாணவிகளுக்கு பேச்சு, கட்டுரை, கவிதை போட்டிகள் நடத்துகிறோம் ஜூலை10ஆம் தேதி சனிக்கிழமை பேராசிரியர் எழுதிய ‘சிந்தனை முழக்கம்’ தொகுப்புநூல், பாராட்டுமலர் சுற்றுலா மற்றும் பத்திரத்துறை அமைச்சர் மாண்புமிகு சுரேஷ்ராஜன் வெளியிடுகிறார்கள். பின்னர் விவாத அரங்கம், கவியரங்கம், வாழ்த்தரங்கம், கலைவிழா போன்ற நிகழ்வுகள் நடைபெற இருக்கிறது. ஜூன்19ஆம் தேதி சனிக்கிழமை காலை 9மணிக்கு பேச்சு, கட்டுரை, கவிதை போட்டிகளில் மாணவ மாணவிகளை பங்கேற்கச் செய்ய வேண்டுகிறோம்.

நன்றியுடன்,

இவண்,

முள்ளஞ்சேரி மு.வேலையன்,
அமைப்பாளர்,
வாழ்நாள் சாதனைக்குழு

# மாணவர்களுக்கான இலக்கியப்போட்டிகள்

**19-06-2010 காலை 9.00 மணி, ரோட்டரி சங்கக் கட்டிடம்**

**உண்ணாமலைக்கடை சாலை, மார்த்தாண்டம்.**

*************

**பேச்சுப்போட்டி** (5 நிமிடங்கள் மட்டும்)

8வது வகுப்புவரை : பேரா.இரா.தியாகசுவாமியின் சிறப்பியல்புகள்

8முதல் 10வரை : பேரா.இரா.தியாகசுவாமியின் தகவல் சேகரிப்பும் நூலகப்பணியும்

11 முதல் 12 வரை : பேரா.இரா.தியாகசுவாமியின் மேடைப்பேச்சும் ஆவணப்படுத்துதலும்

கல்லூரி : பேரா.இரா.தியாகசுவாமியின் பயிற்றுவித்தலும் பண்பாடுரைத்தலும்

**கட்டுரைப்போட்டி** (30 நிமிடங்கள்)

பள்ளிமாணவர் : பேரா.இரா.தியாகசுவாமி ஒரு மனித நேயப்பண்பாளர்

கல்லூரி : நடமாடும் நூலகம் பேரா.இரா.தியாகசுவாமி

**கவிதைப்போட்டி** (40 வரிகளுக்குள்)

அனைவருக்கும் பொது: தமிழ்த்தொண்டர் தியாகசுவாமி வாழ்க

EVANS 04651 272666, 377222

# தமிழறிஞர் பேராசிரியர் தியாகசுவாமி வாழ்நாள் சாதனை பாராட்டு விழா

**இடம்**
தாசையா
திருமணமண்டபம்
மார்த்தாண்டம்.

**நேரம்**
காலை 9.00 முதல்
மாலை 4.00
மணிவரை

**நாள்**
10.07.2010
சனிக்கிழமை



9.00 மணிக்கு : தொடக்கவிழா, நூல், இதழ், குறுந்தகடு வெளியீடு

10.00 மணிக்கு : கவியரங்கம்

11.30 மணிக்கு : சிறப்பு விவாத அரங்கம்

2.00 மணிக்கு : பாராட்டு அரங்கம், கலைவிழா

4.00 மணிக்கு : பரிசளிப்பு விழா

விரிவான நிகழ்ச்சிநிரல் பின்னர் அறிவிக்கப்படும்

**அன்புடையீர்,**

வணக்கம். மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரியில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பேராசிரியர் இரா.தியாகசுவாமி தென்பகுதியில் தமிழ்த்தொண்டாற்றி சிறப்பு பெற்றவர் என்பதை அறிவோம்.

கடந்த 55 ஆண்டுகளாக கலை, அறிவியல், இலக்கியம், வரலாறு என பல்துறை வித்தகராய் மேடைப்பேச்சு வாயிலாக தமிழ் முழக்கம் செய்தவர். பள்ளிகள் கல்லூரிகள், இளைஞர் மன்றங்கள், சமூக அமைப்புகள் என முழங்கிய பெரியவரைப்பற்றி அவருடைய மாணவர்கள், அவரோடு பணியாற்றியவர்கள், நண்பர்கள், அமைப்புரீதியாக செயல்படுபவர்கள் நன்கு அறிவர். அவரைச் சிறப்பிக்கும் வண்ணம் பாராட்டு விழா நடத்த குழு அமைக்கப்பட்டுள்ளது.

பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டிகளும், பாராட்டு விழாவில் நூல், இதழ், குறுந்தகடு வெளியீடு, கவியரங்கம், சிறப்பு விவாத அரங்கம், கலைவிழா, பாராட்டுவிழா போன்ற நிகழ்வுகளும் நடைபெற இருக்கின்றன.

பேராசிரியரைப்பற்றி பெரியவர்கள் அறிந்த வண்ணம் இன்றைய மாணவச் செல்வங்கள் அறிந்திருக்கும் வாய்ப்புகள் குறைவுதான். இருந்தாலும் பிரபலமான மனிதர்களின் சிறப்புக்களை மாணவர்கள் தேடி அலைந்து பேசவும் எழுதவும் முனைவது போல் பல்வேறு சிறப்பியல்புகள் கொண்ட இந்த மாமனிதர் பற்றி பள்ளி மாணவர்களுக்கு தயார் செய்து வழங்கி போட்டிகளில் பங்கேற்கும் படி ஊக்கம் அளிக்க கல்விநிலையங்களையும், பெற்றோர்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

இவண்,
பாராட்டுவிழாக்குழு சார்பில்
**முள்ளஞ்சேரி மு. வேலையன்**
முளங்குழி அஞ்சல் 629162
அலைபேசி : 99427 58333

**பேராசிரியர் இரா. தியாகசுவாமியின் சிறப்பியல்புகள்.**

- குமரிமாவட்ட விடுதலைக்காக முழக்கங்கள் எழுந்த காலத்திலிருந்தே சமூக நலனை கூர்ந்து கவனித்து மேடைகளில் முழங்கிவந்தவர்.
- படிக்கும் காலத்தில் இலக்கியப் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகள் வெல்வதைப் பழக்கமாக்கியவர்.
- சிறுவயது முதலே நூலகங்களைத் தேடிச் சென்று படிக்கும் பழக்கமுடையவர்.
- சிறுவயது முதலே வீட்டில் நூலகம் அமைத்து செய்திகளை ஆவணப்படுத்தும் பழக்கமுடையவர்.
- பத்திரிகைகளுக்கு துணுக்குகள், கதைகள் எழுதும் பழக்கமுடையவர்.
- வானொலியில் பேசி விழிப்புணர்வு ஏற்படுத்தியவர்.
- பேரறிஞர் அண்ணா கலந்து கொண்ட கூட்டமேடையில் தலைமையேற்றுப் பேசி அண்ணாவால் பாராட்டப் பெற்றவர்.
- கல்லூரி விழாக்கள், மன்றவிழாக்களில் நாடகம் எழுதி இளைஞர்களைத் தயார்படுத்தியவர்.
- பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குப் பேச்சு, கட்டுரைப் போட்டிகளுக்கு குறிப்புகள் வழங்கும் பழக்கத்தை இடைவிடாது செய்துவந்தவர்.
- கல்லூரிப் பேராசிரியராக பணியாற்றிய 28 வருட காலத்தில் 7 நாட்கள் மட்டுமே விடுப்பு எடுத்த சிறப்புடையவர்.
- பட்டம், விருது, பதவிகளுக்காக விண்ணப்பம் செய்து பெற விரும்பாதவர்.
- சீர்திருத்தச் சிந்தனை எப்போதும் பேசக்கூடியவர்.
- ஒழுக்கம், நன்னெறி, சமூகநீதி பேண, பேச, எழுத தன்னையும் மற்றவரையும் தயார்படுத்துபவர்.
- பகையுணர்வு மனதினில் பதித்துக் கொள்ளாதவர்.
- நியாயமாகவும், நீதியாகவும் கட்டுப்பாடுடனும் நடக்க வேண்டும் என்பதில் உறுதியானவர்.
- யாரையும் சிரமப்படுத்தாமல் எவர் அழைப்பையும் ஏற்று கருத்து மழைபொழிபவர்.
- அன்றாட செய்திகளை ஆதாரத்துடன் பேசி விழிப்புணர்வு அடையச்செய்பவர்.
- நேரம் தவறாமைக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பவர்.
- தமிழ், வரலாறு, இலக்கியம், அறிவியல் என அனைத்து துறைகளிலும் பேசக்கூடிய ஆற்றல் பெற்றவர்.
- வறியவருக்கு உதவும் தகைமை கொண்டவர்.
- கல்வி கற்போருக்கு உதவவிருப்பம் கொண்டவர்.
- நல்ல மனித நேயப் பண்பாளர்.